# இமதுவ பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, இமதுவ பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இமதுவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பகிரிந்தளிக்கும் குழுவின் சிபார்சின் அடிப்படையில் ஹபராதுவ பிரதேச சபையினால் இமதுவ பிரதேச சபைக்கு கையளிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட ரூபா 9,794,393 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 2,051,704 தொகையான பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள்

தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 27 ஆந் திகதி வரையிலும் உரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன சட்டரீதியாக பிரதேச சபை கையேற்க/ கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 23,729,131 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 319,637 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,607,017 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 421 | 200 | 175 |
| (ii) | வாடகை | 1,050 | 1,073 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 502 | 737 | 142 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,222 | 13,728 | 27,034 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 226,373 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,948,416 |

## 2.3 செயற்படற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

ரூபா 126,000 பெறுமதியான மினிகுபோட்டா டெக்ரர் 4 வருட காலமாக கோதாகொட உப அலுவலக வளவில் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. அவ்வாறே டெக்ரரைப் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு படிகள் செலுத்துவது தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக 05 மாதாந்தக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காத 10 உறுப்பினர்களுக்கு ரூபா 54,500 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

### செயற்திட்ட அமுலாக்கலில் தாமதம்

தகனக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,661,623 தொகை மற்றும் இமதுவ வியாபாரத் தொகுதிக்கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 22,156,680 தொகைகளில் இரண்டு ஒப்பந்த காரர்களுடன் முறையே 2007 ஆகஸ்ட் 08 மற்றும் 2007 திசெம்பர் 12 ஆந் திகதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2008 பெப்ரவரி 09 ஆந் திகதி மற்றும் 2008 செப்தெம்பர் 12 ஆந் திகதிகளில் வேலைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தன. எனினும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 27 ஆந் திகதி வரையும் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. தாமதக் காலம் முறையே 03 வருடமும் 11 மாதங்கள் மற்றும் 04 வருடங்களும் 06 மாதமும் ஆக இருந்தது.

---

## 2.6 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 05 ஆம் பந்தியின் பிகாரம் சபையின் இலட்சியம் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 3 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்